ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/43 - 2015 දෙසැම්බර් මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.12.31

*1947/43 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 987*

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2016, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் இக்கட்டளை மூலம் :-

(அ) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு மற்றும் இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட உற்பத்திச்சாலையிலிருந்து வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீது ஒரு லீற்றருக்கு முப்பது ரூபா (30/-) எனும் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்,

ஆயின், தீவிலிருந்து எந்த போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் அளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றதோ அந்தப் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் அளவானது விலக்களிக்கப்படுதல் வேண்டுமெனவும்,

(ஆ) 2007, மாச்சு மாதம் 12 ஆந் திகதிய 1488/1 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 896 ஆனாது இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும்,

இக்கட்டளை மூலம் பணிக்கின்றேன்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2015, திசெம்பர் 31.

1- 731



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.